08-11-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : மின் பற்றாக்குறை : தமிழக அனுபவத்திலிருந்து நாம் கற்கவேண்டியவை**

**தொடக்க உரையாடல் : மு. மயூரன்**

தமிழகத்தில் நிலவும் மின்பற்றாக்குறை, மின்தடை போன்றவை இன்று தமிழ் ஊடகங்களில் அடிக்கடிப் பேசப்படும் விடயமாகிவிட்டது. இது தமிழகத்தின் பிரச்சினையாக இருந்தபோதும், இப்பிரச்சினையின் தன்மை, அதன் காரணங்கள், தீர்வுகள் போன்றவற்றைக் கற்றுக்கொள்வது அவசியமானதாகும். தமிழகத்தின் மின் பற்றாக்குறைக்கான காரணங்கள், சூழல் போன்றவை இலங்கையிலும் எதிர்காலத்தில் ஏற்படச் சாத்தியமுண்டு என்ற வகையில் இதுபற்றிய உரையாடலை நாமும் முன்னெடுக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

மின்சாரம் தொடர்பான கொதிக்கும் இரண்டு பிரச்சினைகள் தற்போது தமிழகத்தில் உள்ளன. ஒன்று கூடங்குளம் அணு உலைக்கெதிரான போராட்டங்கள். இரண்டு, மின் பற்றாக்குறையும் மின்தடையும். இதில் இரண்டு பிரச்சினைகளையும் ஒன்றுபோல் காண்பிக்கும் முயற்சிகளும் இடம்பெறுகின்றன. இவ்வாறான முயற்சிகள் கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கான ஆதரவை மக்களிடம் பெறுவதற்கான கபட நோக்கம் கொண்டவையாகும்.

தமிழகத்தின் மின் பற்றாக்குறையும் மின்தடையும் தேர்தல் முடிவுகளிலே கூட தாக்கம் செலுத்தும் அளவுக்கு அரசியல் பிரச்சினையாக வளர்ச்சியடைந்து நிற்கும் இந்த நிலையிலும் கூட, பற்றாக்குறைக்கான உண்மையான காரணங்கள் குறித்து மக்கள் போதிய விழிப்புணர்வற்ற நிலையிலேயே இருக்கிறார்கள். இதற்கு ஊடகங்கள் வாயிலாகச் செய்யப்படும் தீவிரப் பரப்புரை முக்கியமான காரணமாகும்.

**பெருகிவரும் சனத்தொகை**

இயல்பான மக்கள் பெருக்கமும் நடுத்தரவர்க்கத்தினரின் மின் நுகர்வு அதிகரித்து வருவதும் ஒரு காரணமாக முன்வைக்கப்படுகிறது. இதில் உண்மை இல்லாமலில்லை. ஆயினும் இதை மட்டுமே காரணமாக முன்வைப்பதில் வேறு நலன்கள் உள்ளன.

> பன்னாட்டுக் கம்பனிகளுக்கு வழங்கவேண்டிய மின்சாரம், அக்கம்பனிகள் உருவாக்கும் கழிவு, அக்கம்பனிகளுக்குத் தேவைப்படும் நன்னீர் போன்றவற்றை அரசே பொறுப்பெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறது. இது இறுதியில் மக்கள் மீதே சுமையாக மாறிப்போகிறது. அக்கம்பனிகள் உருவாக்கும் சுற்றுச்சூழல் தீங்குகளுக்கோ, மிதமிஞ்சி உறிஞ்சி ஏற்படுத்தும் நீர்வள அழிவுக்கோ அவை கட்டணம் எதனையும் செலுத்துவதில்லை.

**மின்சாரம் தனியார்மயமாகியமை.**

தற்போதைய மின் நெருக்கடிக்கான உண்மைக்காரணங்களில் முதன்மையானது இதுவாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில், அச்சட்டத்தினை ஆக்குவதில் முன்னின்றுழைத்த அம்பேத்கரால் செய்யப்பட்ட பரிந்துரைப்படி மின்சாரமானது மக்களின் அடிப்படைத்தேவையாக ஆக்கப்பட்டிருந்தது. இதன்காரணமாக மின்சாரத்தை அரசே உற்பத்தி செய்ததுடன் குறைந்த விலையிலும் மானியத்துடனும் தேவையுள்ள சாதாரண மக்களை மின்சாரம் சென்றடைந்தது. விவசாயிகளுக்கும் சிறு கைத்தொழில் முனைவோருக்கும் இதனால் பெரும் பயன் விளைந்தது.

பிறகான காலங்களில் இயற்றப்பட்ட, திருத்தப்பட்ட சட்டங்கள் காரணமாக, குறிப்பாக 2003 இல் BJP அரசு கொண்டுவந்த மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தொடர்பான புதிய சட்டங்கள் காணமாக மின்சாரமானது அடிப்படைத்தேவை என்ற நிலையிலிருந்து தனியார் மயமான விற்பனைச்சரக்காக மாற்றமடையத்தொடங்கியது.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

பருவநிலை மாற்றங்களின் அரசியல்

தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ | 15-11-2012



இலங்கையர்கோன்

**இலங்கையர்கோன் (இ. நவம்பர் 15, 1961)**
ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவர். தமிழில் சிறுகதை தோன்றி வளர்ந்த காலத்தில் அதன் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தவர்களில் ஒருவர் என்று பாரட்டுப் பெற்றவர். மணிக்கொடி, பாரததேவி, சக்தி, சூறாவளி, கிராம ஊழியன், சரஸ்வதி ஆகிய தமிழக இதழ்களிலும் ஈழகேசரி, தினகரன், ஈழநாடு, கலைச்செல்வி, வீரகேசரி ஆகிய ஈழத்து இதழ்களிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்தன. இவர் விமர்சனம், நாடகம் ஆகிய துறைகளிலும் ஈடுபாடு காட்டினார்.

பதினெட்டாவது வயதிலே இவரது முதற் கதையான ' மரிய மதலேனா' 1930களில் கலைமகள் இதழில் வெளியாகிற்று. சமஸ்கிருதம், இலத்தீன், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இவர் ஆழ்ந்த பயிற்சி பெற்றார்.

நூல்கள்:

- வெள்ளிப்பாதசரம் (சிறுகதைத் தொகுப்பு)
- மாதவி மடந்தை (மேடை நாடகம்)
- மிஸ்டர் குகதாசன் (நகைச்சுவை நாடகம்)
- முதற்காதல் (மொழிபெயர்ப்பு நாவல்)

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

**மின் பற்றாக்குறை : தமிழக அனுபவத்திலிருந்து நாம் கற்கவேண்டியவை**

**முன்பக்கத் தொடர்ச்சி..**

மின் உற்பத்தி, மின் விநியோகம் போன்றவற்றைத் தனியார்த்துறை கையிலெடுத்துக்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டது. இதனால் அலகொன்றுக்கான மின் கட்டணம் உயர்ந்து சென்றது. மின்கட்டணம் உயர்ந்து சென்றதால் அரசு மானியம் போன்றவற்றை நிறுத்தும் நிலை ஏற்பட்டதுடன் மின் தட்டுப்பாடும் தொடங்கியது.

மின்சாரம் தனியார்மயமாகியமை மின்தட்டுப்பாட்டுக்கான முக்கியமான காரணம் என்பதை மூடி மறைக்கும் அரசு, தான் தனியார்மயத்தையும் முதலாளிகளையும் சார்ந்து நிற்பதால், மின்சாரம் தனியார்மயமாதலே மின் தட்டுப்பாட்டை நீக்கும் என்று பிரசாரம் செய்கிறது.
தற்போது மின்சார உற்பத்தியையும் விநியோகத்தையும் முற்றாகத் தனியார் மயமாக்கும் திட்டமானது நாளடைவில் மின்சாரத்தை சாதாரண ஏழை உழைக்கும் மக்களின் கைகளிலிருந்து முற்றாகவே பறித்துவிடும் அபாயமும் உள்ளது.

**பன்னாட்டுக் கம்பனிகளின் வருகை**

திறந்த பொருளாதாரக்கொள்கை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு, பன்னாட்டு மூலதனம் தடையின்றி இந்தியாவினுள் நுழையக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.
வெளிநாட்டு முதலீட்டினைக் கவருமுகமாக, முதலீட்டு வலயங்கள், மானியம், உறுதிமொழிகள் என்று ஏகப்பட்ட திட்டங்களை இந்திய அரசும் மாநில அரசுகளும் தீட்டின.

ஏழை உழைக்கும் மக்களுக்கான மின்சார மானியம் என்பதை இல்லாமலாக்கி, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மின்சார மானியம் என்ற நிலையை நோக்கி இந்தியா தாழ்ந்தது.
24 மணிநேரம் தடையற்ற அதிவலு மின்சாரம், மின்சாரக்கட்டணங்களில் சிறப்புச்சலுகைகள் என்று இவ்வரசுகள் பன்னாட்டுக் கம்பனிகளுடன் செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தங்கள், பாரிய மின்சாரத்தேவையினை உருவாக்கின. தமிழகத்தில் இவ்வாறுதான் பெரும் மின்சார நெருக்கடி ஏற்பட்டது.

இப்பன்னாட்டுக் கம்பனிகள் குறைந்த கூலியுடன் உழைப்பைத்திருடவே இந்தியா போன்ற நாடுகளுக்கு வருகின்றன. அந்நியச்செலாவணி என்ற மந்திரத்தை மறுபடி மறுபடி ஓதினாலும் அந்தப்பிரசாரத்துக்குப் பின்னாலுள்ள உண்மைகள் மறைக்கப்பட்டே வருகின்றன. பன்னாட்டுக் கம்பனிகளுக்கு வழங்கவேண்டிய மின்சாரம், அக்கம்பனிகள் உருவாக்கும் கழிவு, அக்கம்பனிகளுக்குத் தேவைப்படும் நன்னீர் போன்றவற்றை அரசே பொறுப்பெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறது. இது இறுதியில் மக்கள் மீதே சுமையாக மாறிப்போகிறது. அக்கம்பனிகள் உருவாக்கும் சுற்றுச்சூழல் தீங்குகளுக்கோ, மிதமிஞ்சி உறிஞ்சி ஏற்படுத்தும் நீர்வள அழிவுக்கோ அவை கட்டணம் எதனையும் செலுத்துவதில்லை.

அதேபோன்று அவர்களுக்குத் தேவையான மின்சாரத்தை உருவாக்குவதால் உண்டாகக்கூடிய தீங்குகளுக்கும் அவை பொறுப்பேற்கப்போவதில்லை. கூடங்குளம் விவகாரமும் இவ்வாறுதான் இதனோடு சம்பந்தப்படுகிறது.

**இலங்கை அனுபவம்**

இலங்கையிலும் இதேபோன்ற மின்சார நெருக்கடி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. 1977ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக்கொள்கையின் பிற்பாடு வெளிநாட்டு முதலீடுகளும் பன்னாட்டுக் கமபனிகளும் தடையின்றி இலங்கைக்குள் புகுந்துவருகின்றன. போர் காரணமாக இதில் வேகத்தடைகள் ஏற்பட்டிருந்தது. தற்போது போர் முடிவுக்குப்பின் இந்த நிலை வேகமாக அதிகரித்து வருகிறது.

இக்கம்பனிகளுக்கான மின்சாரத்தை உருவாக்கி வழங்கவேண்டிய பொறுப்பு இலங்கை அரசின் மீது விழும். அல்லது மின் உற்பத்தியைத் தனியார்மயப்படுத்த வேண்டி ஏற்படும். இதனால் ஏற்படக்கூடிய மின்கட்டண உயர்வு, சூழல் மாசடைதல், ஆபத்தான விளைவுகள், வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுதல் என்று எல்லாவற்றையும் மக்களே பொறுப்பேற்கவேண்டியதாகும். மேல்கொத்மலைத்திட்டம், நுரைச்சோலை அனல் மின் நிலையத்திட்டம், சம்பூர் அனல் மின் நிலையத்திட்டம் போன்றவை இப்பிரச்சினைக்கான எடுத்துக்காட்டுகளும் குறிகாட்டிகளும் ஆகும்.

**தீர்வு**

இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதென்பது நீண்டகாலத்திட்டத்தின் அடிப்படையிலேயே செய்யப்பட முடியும். நாட்டுக்குரிய, நாட்டு மக்களைச்சார்ந்த பொருளாதாரக் கொள்கை ஒன்றினை அரசு வகுப்பதன் மூலமே இதனைச்சாத்தியப்படுத்த முடியும். உழைக்கும் மக்களுக்கான மின்சாரம் என்ற அடிப்படையில் சிறு சிறு மின்னுற்பத்தி நிலையங்களைப் பரந்தளவில் அமைப்பது போன்றவை எல்லாம் ஆலோசனைகளாக முன்வைக்கப்படுகின்றன.

மின்சார நெருக்கடி, மின்சார உற்பத்தி தனியார்மயமாதல் போன்றவை பற்றிய தலைகீழான விளக்கமளிப்புக்களையும் தவறான பிரசாரங்களையுமே அரசுகளும் அதிகாரவர்க்கமும் அவற்றுக்குச்சார்பான ஊடகங்களும் செய்து வருகின்றன. இந்தப்பொய்களை நம்பாது, உண்மையான காரணங்களையும் ஆக்கபூர்வமான தீர்வுகளையும் இனம்காணுமளவுக்கு மக்கள் விழிப்புணர்வடையவேண்டும். அதன் பிறகு அரசின் தவறான கொள்கைகளுக்கெதிராக மக்கள் போராடிச் சரியான கொள்கைகளைக்கொண்டுவர வேண்டும். இதன் மூலம் மட்டுமே என்றென்றைக்கும் மின்சாரத்தினை மக்களின் அடிப்படைத்தேவைக்கான ஒன்றாக வைத்துப் பேண முடியும்.




**பருவநிலை மாற்றங்களின் அரசியல் (Politics of Climate Change)**

**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )**

1. புவி வெப்பமடைதல் மற்றும் பருவநிலை மாற்றங்கள் பற்றிய சுருக்கமான அறிமுகம்
2. புவி வெப்பமடைதலைக் குறைக்க எடுக்கப்பட்ட சர்வதேச முயற்சிகள்
3. புவி வெப்பமடைதல் மற்றும் பருவநிலை மாற்றங்கள் பற்றிய மாயைகள்
4. உண்மையில் புவி வெப்பமடைதல் அச்சுறுத்தலான ஆபத்தா?
5. உள்நாட்டு யுத்தங்களின் காரணியாக பருவநிலை மாற்றங்கள்
6. பருவநிலை மாற்றங்கள் பற்றிய ஆய்வுகளும் அரசியலும்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA